## முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

**தமிழ்**

மதிப்பெண்: 60

வகுப்பு - மூன்று

நேரம்: 2.00 மணி

I. **அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. ஆண்மை என்ற சொல்லின் பொருள் ____________

   அ) வீரம் ஆ) பெருமை இ) பொறுமை

2. உன்னை + தவிர என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

   அ) உன்னைதவிர ஆ) உனைதவிர இ) உன்னைத்தவிர

3. பாரியுடன் நடைப்பயிற்சி சென்றவர் ____________

   அ) மாமா ஆ) அப்பா இ) தாத்தா

4. ‘படைத்தளபதி’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________

   அ) படை + தளபதி ஆ) படைத் + தளபதி இ) படை + த்தளபதி

5. ஓசையில் நீண்டு ஒலிக்கும் எழுத்துகள் ____________

   அ) நெட்டெழுத்துகள் ஆ) குற்றெழுத்துகள் இ) வல்லினம்

6. பாலை + எல்லாம் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

   அ) பாலையெல்லாம் ஆ) பாலைஎல்லாம் இ) பாலெல்லாம்

7. நஞ்சு என்ற சொல்லின் பொருள் ____________

   அ) இனிப்பு ஆ) மாத்திரை இ) விஷம்

8. சின்னக்கயிறு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) சின்னக் + கயிறு ஆ) சின்ன + கயிறு இ) சிறிய + கயிறு

9. நன்னெறி - பொருள் கூறுக. ____________

   அ) நல்ல பண்பு ஆ) நன்மை செய்பவர் இ) சிறுவர்

10. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ________________

    அ) கொடுத்தல் ஆ) எடுத்தல் இ) வாங்குதல்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

1. ஓசையில் குறுகி ஒலிக்கும் எழுத்துகள் ________________
2. தோற்றுப் போக பயந்தால் ________________ நம்மைத் தேடி வராது.
3. ‘தமிழ் அமுது’ பாடலின் ஆசிரியர் ________________
4. நித்திலம் என்ற சொல்லின் பொருள் ________________
5. ஒரு பொருளை மட்டும் குறிப்பது ________________

**இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** 4 × 1 = 4

1. உண்மை x
2. கடினம் x
3. பகைவர்கள் x
4. மேலே x

**ஈ) பொருத்துக.** 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| 1. ஏறு | - | மூங்கில் |
| 2. படைத்தளபதி | - | 108 |
| 3. சான்றோர் மொழி | - | காளை |
| 4. கழை | - | சிங்கக்குட்டி |
| 5. அவசர ஊர்தி | - | பூதஞ்சேந்தனார் |

II. **அ) பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஆறனுக்கு விடையளி.** 6 × 2 = 12

1. கவிஞர் கண்ணதாசனின் பிறந்த ஊர் எது?
2. ஐம்பொறிகளைக் கூறுக.
3. பாரி யாருடன் எங்கு சென்றான்?
4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?
5. பண்டைய கால மனிதர்கள் பொருட்களை வைக்க எடுத்துச் செல்ல எவற்றை பயன்படுத்தினார்கள்?
6. வழிப்போக்கர் ஏன் வியப்படைந்தார்?
7. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன?
8. கழுதையின் பணி என்ன?

**ஆ) பின்வரும் பாடல்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 4 = 4

1. தோண்டுகின்ற ........... நித்திலமே. 'தமிழ் அமுது' பாடைலை எழுதுக.
2. 'கற்றார் முன்' எனத் தொடங்கும் இனியவை நாற்பது பாடலைப் பிழையின்றி எழுதுக.

**இ) உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.** 5

III. **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1. கலைந்துள்ள எழுத்துகளை வரிசைப்படுத்தி சொல்லை உருவாக்குக. **(4)**

| | | | | |
|---|---|---|---|---|
| நி | ம் | ல | தி | த் |

| | | | | |
|---|---|---|---|---|
| செ | ழ் | மி | த | ந் |

| | | | | |
|---|---|---|---|---|
| தை | க | வி | ள் | க |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மை | ம் | த | க | ல் | வ | ய |

2. பொருள் வேறுபாடு கூறுக. **(2)**

அ) தலை, தழை ஆ) வழி, வளி

3. பின்வரும் பத்தியை படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளி. **(4)**

புவனாவும் கலாவும் தோழிகள். பள்ளி முடிந்து வீட்டிற்கு பேசிக் கொண்டே நடந்து சென்றனர். அப்போது சிறுவர்கள் ஒரு டப்பாவில் பொன்வண்டு பிடித்து அடைத்து வைத்துக் கொண்டிருந்தனர். புவனா எதற்காக அவைகளைப் பிடிக்கிறீர்கள்? பாவம் அடைத்து வைக்க வேண்டாம். உங்களையெல்லாம் ஒரு இருட்டறையில் பூட்டினால் என்ன செய்வீர்கள்? பாவம் அல்லவா! பொன்வண்டினை விட்டு விடுங்கள் உயிர்களை துன்புறுத்தக் கூடாது என்றாள். உடனே சிறுவர்கள் யோசித்துப் பார்த்து டப்பாவை திறந்து பொன்வண்டை பறக்க விட்டனர். இனி அவ்வாறு செய்ய மாட்டோம் என்றும் கூறினர்.

வினாக்கள்:

1. கலாவின் தோழி யார்?
2. புவனாவும் கலாவும் எங்கிருந்து வீட்டிற்கு சென்றனர்?
3. சிறுவர்கள் பொன்வண்டை எதற்காக பிடித்தனர்?
4. உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று கூறியது யார்?

IV. **பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு விடை எழுதுக.**

$5 \times 1 = 5$

1. முதுகிலே சுமை தூக்கி முணங்காமல் நடந்து வருவான். அவன் யார்?
   (புதிருக்குப் பொருத்தமான விடை எழுதுக.)
2. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக
   (முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி தொடர் உருவாக்குக.
3. சூரியனின் ________________ கதிர்கள் நம்மை நேரடியாக தாக்குகின்றன
   (புரஊதா, புறஊதா)
4. கண், பழம் (ஒருமையை பன்மையாக மாற்றி எழுதுக.)
5. வானம் இன்றி ________________ வராது. (பொருத்தமான சொல்லால் நிரப்புக.)